# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.151/2023</u>

2024-ம் ஆண்டு ஜுன் திங்கள் 18-ஆம் நாள் செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ருத்ரா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.15 வரை குறியிடு செய்யப்படுகிறது.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. நான் மாமனார் மாமியாருடன் ஒன்றாக தான் இருக்கிறேன். என் கணவர் இன்ஜினியராக வேலை பார்த்து மாதம் ரூ.6000/- Dhirham சம்பாதித்தார் என்பதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் Testing இன்ஜினியராக வேலை பார்த்தார் என்பதற்கான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.9 ல் ஆக்ஸிசன் வெல்டராக வேலை பார்த்ததாக உள்ளது. ஆக்ஸிசன் வெல்டருக்கு சம்பளம் குறைவு என்றும், அதனால் என் கணவர் Testing Engineer ஆக வேலை பார்த்தார் என்று பொய் சொல்கிறேன்

என்றால் சரியல்ல. என் கணவர் கூடுதலாக டிரைவர் வேலை பார்த்து சம்பாதித்தாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் மறுபடியும் வெளிநாடு செல்ல இருந்தார் என்பதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு விசா முடிந்து தான் நாடு திரும்பினார் என்றும், விபத்து சமயத்தில் அவருக்கு வேலை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவருடன் உடன்பிறந்தவர் யாரும் இல்லை. என் மாமனார் மாமியாருக்கு தனி வருமானம் உள்ளது என்றும், அவர்கள் என் கணவரை சார்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் தான் தவறான திசையில் சென்று விபத்து ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. என் கணவர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்தார் என்றால் சரியல்ல. என் கணவர் தலைகவசம் அணிந்திருந்தால் தலையில் அடிப்பட்டு இறந்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல.அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக என் கணவரின் வருமானத்தை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்றும், எனக்கு எந்த நஷ்டஈடும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.